# ஜெயங்கொண்டம் நகராட்சி

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>MCR NO</th><th>SERIAL NUMBER AND SUBJECT IN THE AGENDA</th><th>DECISION OF THE COUNCIL</th></tr>
<tr><td>07.09.2018</td><td></td><td>ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2018ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07.09.2018ம் வெள்ளிக் கிழமை காலை 11.30 மணியளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம்.<br>தனி அலுவலர்,<br>ஜெயங்கொண்டம் நகராட்சி</td><td></td></tr>
<tr><td>07.09.2018</td><td>19(அ)</td><td><u>பொருள் எண். 1</u><br>ஜெயங்கொண்டம் நகராட்சியின் பேருந்து நிலையத்தில் பேருந்து நிலையத்தின் விரிவாக்கம் செய்திட கட்டுமான பணிகள் தொடர்ந்து நடைப்பெற்று வருவதால் இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமையை 01.10.2018 முதல் 31.12.2018 முடிய மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்து வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u> அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண்.132/2018/அ1</u></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>07.09.2018</td><td>20</td><td><u>பொருள் எண். 1</u><br>01.04.2018 ( 2018–19 முதல் அரையாண்டு ) முதல் நகராட்சிகளில் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.G.O.M.S.73, நாள்:19.07.2018 மற்றும் இதனைத் தொடர்ந்து உத்திரவிடப்பட்ட அரசாணை எண்.76, நாள்:26.07.2018 ஆகிய அரசாணையை அமல் படுத்துதல் தொடர்பாக இந்நகராட்சியின் நகர்மன்ற தீர்மான எண்ணில் முடிவு செய்த மண்டல மதிப்பினை ( நகர்மன்ற தீர்மான எண்.142 நாள்:12.03.2008 ) கீழ்க்கண்டவாறு உயர்வு செய்ய மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது .
<table>
<tr><th rowspan="2">மண்டலம்</th><th colspan="2">சதுர அடிக்கான மண்டல அடிப்படை மதிப்பு</th></tr>
<tr><th>தற்போதைய மதிப்பு</th><th>சீராய்வு செய்யப்பட்டுள்ள மதிப்பு</th></tr>
<tr><td>A</td><td>1. 00 பைசா</td><td>1.50 பைசா</td></tr>
<tr><td>B</td><td>0.75 பைசா</td><td>1.10 பைசா</td></tr>
<tr><td>C</td><td>0.50 பைசா</td><td>0.75 பைசா</td></tr>
</table>
<u>அலுவக குறிப்பு :</u><br>மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br><u>ந.க.எண்.1030/2018/அ2</u></td><td>ஒப்புதல் அளிக்கப்பட்டது</td></tr>
<tr><td>07.09.2018</td><td>21</td><td><u>பொருள் எண். 2 (21)</u><br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நவீன கலவை உரக்கிடங்கு அமைப்பதற்கு மாண்புமிகு.தமிழக முதல்வர் அவர்களது மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டு அறிவிப்பு எண்.152 நாள்.13.12.2013 ன்படி அறிவிக்கப்பட்டது. ரூ.967.56 இலட்சம் மதிப்பீட்டில் 20 எண்ணிக்கைகள் கொண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு 07.01.2015 ஆம் தேதியில் நிர்வாக அனுமதி பெறப்பட்டதின் அடிப்படையில் 03.03.2015 ஆம் தேதியில் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 19.06.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 12 எண்ணிக்கை பணிகள் வாகனங்கள் வாங்குவதற்கும், 8 எண்ணிக்கைக்கு கட்டிட பணிகளாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டு 19.06.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதன் அடிப்படையில் வாகனங்கள் விநியோகம் செய்யும் நிறுவனத்திற்கும் மற்றும் கட்டிடப் பணிகளுக்கு M/s.Dharani Hi-</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

Tech Projects (P) Ltd., மன்னார்குடி அவர்களுக்கும் **28.09.2015** ஆம் தேதியில் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| | Dumper Bin 54 எண்ணிக்கைகள் வாங்குதல். | **26.68** | M/s.Susi Industries, Chennai | 24,46,200/- |
| | மூன்று சக்கர சைக்கிள் 5 எண்ணிக்கைகள் வாங்குதல். | **2.05** | ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூர். | 1,70,000/- |
| | தள்ளு வண்டி 42 எண்ணிக்கைகள் வாங்குதல். | **3.92** | ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூர். | 3,88,500/- |
| | வாருகோல் மற்றும் Metal Tray வாங்குதல். | **0.42** | Balaji Enterprises, Chennai. | 40,500/- |
| | கலவை உரக்கிடங்கில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குதல். | **12.30** | Karthia Enterprises, Chennai. | 14,52,600/- |
| | 125 KVA ஜெனரேட்டர் செட் (with Acoustic Enclosure) ஒரு எண்ணிக்கை வாங்குதல். | **7.05** | Madras Power Corporation, போரூர், சென்னை. | 7,03,000/- |
| | Dumper Placer வாகனம் ஒரு எண்ணிக்கை வாங்குதல். | **16.09** | M/s. Krystal Motors Pvt. Ltd., சேலம் | 14,89,000/- |
| | புதியதாக Front end loader heavy duty with back hoe வாகனம் ஒரு எண்ணிக்கை வாங்குதல். | **21.50** | TATA Hitachi Constructions Machinery Co.Ltd, சென்னை. | 21,92,609/- |
| | புதியதாக Bobcat Skid Steer Loader வாகனம் ஒரு எண்ணிக்கை வாங்குதல். | **17.34** | M/s.Suryabala Trucks & Tippers Pvt. Ltd.,Coimbatore. | 17,84,202/- |
| | புதியதாக Hydraulic Excavator வாகனம் ஒரு எண்ணிக்கை வாங்குதல். | **16.88** | TATA Hitachi Constructions Machinery Co.Ltd, சென்னை. | 16,69,219/- |
| | புதியதாக Vibratory Soil Compactor வாகனம் ஒரு எண்ணிக்கை | **24.40** | TATA Hitachi Constructions Machinery Co.Ltd, | 23,54,219/- |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | வாங்குதல். | | சென்னை. | | |
| | | | புதியதாக Tractor with Trailer வாகனம் ஒரு எண்ணிக்கை வாங்குதல். | 6.72 | J.J. Tractors, அரியலூர். | 6,86,308 /- | |
| | | | கலவை உரக்கிடங்கு அமையவுள்ள இடத்தில் கிராவல் பரத்தி சமன் செய்யும் பணி. | 98.00 | M/s.Dharani Hi-Tech Projects Pvt Ltd., மன்னார்குடி. | 1,31,81, 859/- | |
| | | | கலவை உரக்கிடங்கு அமையவுள்ள இடத்தில் குப்பைகளை தரம் பிரித்து பதப்படுத்தும் கொட்டிகள் கட்டுதல். | 321.00 | M/s.Dharani Hi-Tech Projects Pvt Ltd., மன்னார்குடி. | 2,62,06, 936/- | |
| | | | கலவை உரக்கிடங்கு அமையவுள்ள இடத்தில் சுற்றுச் சுவர் அமைத்தல். | 103.29 | M/s.Dharani Hi-Tech Projects Pvt Ltd., மன்னார்குடி. | 1,05,16, 138/- | |
| | | | கலவை உரக்கிடங்கு அமையவுள்ள இடத்தில் அலுவலக கட்டிடம், ஆழ்குழாய் கிணறு, பாதுகாப்பு அறை, எடை போடும் இயந்திரம் மற்றும் அறை, கட்டுப்பாட்டு அறை, மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி மற்றும் கழிவு நீர் தொட்டி அமைத்தல். | 14.00 | M/s.Dharani Hi-Tech Projects Pvt Ltd., மன்னார்குடி. | 29,60,25 8/- | |
| | | | கலவை உரக்கிடங்கில் நிறுவத் தேவையான இயந்திரங்கள் வாங்குதல். | 78.24 | M/s. Susi Industries, Chennai. | 80,07,01 7/- | |
| | | | கலவை உரக்கிடங்கு அமையவுள்ள இடத்தில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல். | 49.08 | M/s.Dharani Hi-Tech Projects Pvt Ltd., மன்னார்குடி. | 50,17,93 8/- | |
| | | | கலவை உரக்கிடங்கு அமையவுள்ள இடத்தில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 28.60 | M/s.Dharani Hi-Tech Projects Pvt Ltd., மன்னார்குடி. | 26,43,86 7/- | |
| | | | கலவை உரக்கிடங்கு அமையவுள்ள இடத்தில் (Land Fill purpose) நிர்வாக அலுவலகம் மற்றும் இதர கட்டிடங்கள் (Administrative Building, Leachate Collection, Removal System and other facilities) கட்டுதல். | 120.00 | M/s.Dharani Hi-Tech Projects Pvt Ltd., மன்னார்குடி. | 1,16,76, 406/- | |

மேற்கண்ட 20 எண்ணிக்கை கொண்ட பணிகளில் வ.எண்.13,14,15,16 மற்றும் 17 ல் கண்டுள்ள பணிகள் நடைபெற்று வரும் நேரத்தில் வ.எண்.1 முதல் 12 வரையிலான 12 எண்ணிக்கை வாகனங்கள் பெறுதல் பணி முடிவுற்றுள்ளது. மேற்படி கட்டிடப் பணிகள் ஆரம்பிக்கும் சமயம் அப்பகுதி அருகில் உள்ள பொதுமக்கள் அப்பகுதிகளில் நீர் நிலைகள் மாசுப்படுவதாக தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன்பின் கட்டிடப் பணிகளை சுமார் 3.00 மீட்டர் உயரத்திற்கு உயர்த்தி கட்ட சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் ஆய்வின் போது அறிவுரை வழங்கினார்கள்.

அதன் பேரில் மேற்கண்ட 8 எண்ணிக்கையிலான கட்டிடப் பணிகளுக்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி 18.01.2016 அன்று பெறப்பட்டு M/s.Dharani Hi-Tech Projects (P) Ltd., மன்னார்குடி அவர்களால் பணி துவங்கப்படும் நிலையில் அப்பகுதி மக்கள் **தேசிய பசுமை தீர்ப்பாய வழக்காடும் மன்றத்தில்** வழக்கு தொடுத்தனர். இவ்வழக்கில் தேசிய பசுமை தீர்ப்பாய வழக்காடும் மன்றம் 04.05.2016 அன்று தனது தீர்ப்பில் இப்பணிகளில் வரும் கட்டிடப் பணிகள் அருகில் உள்ள தார்சாலைக்கு மேல் சுமார் 60 செ.மீ. உயரத்திற்கு Basement அமைக்க வேண்டுமென தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் மீண்டும் 3.00 மீட்டர் உயரத்திலிருந்து 6.00 மீட்டர் உயரத்திற்கு கட்டிடப் பணிகளுக்கு 04.11.2016 அன்று திருத்திய வடிவமைப்பு பெறப்பட்டு தொடர்ந்து பணி நடைபெற்று வந்தது.

இந்நிலையில் பணிகளில் ஏற்பட்ட சுணக்கத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையரக உதவி செயற்பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) அவர்கள் 25.06.2018 அன்று தளத்தை பார்வையிட்டு திடக்கழிவு பணியில் Metal Roofing பணி வரை செய்து கொண்டு வேறு பணியை தொடராமல் Fecal Sludge Management க்கு மாற்றம் செய்துக் கொள்ளவும், இதில் மீதமுள்ள தொகைக்கு 3 MT கொள்ளளவு கொண்ட நுண் உரம் தயாரிப்பு மையம் அமைக்க திருத்திய மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் ஒப்புதல் பெற அறிவுரை வழங்கியதற்கிணங்கவும், ஒப்பந்ததாரர் தொடர்ந்து பணியினை மேற்கொள்ள இயலாது என 29.08.2018 அன்று கடிதம் வழங்கியதன் பேரிலும் இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்டுள்ள வார்டுகளில் உள்ள வீடுகளில் இருந்து தினந்தோறும் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை உரமாக தயார் செய்திட Micro Compost Centre (MCC) (நுண்ணிய உரக்கிடங்கு) கட்டுமானப்பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின்பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | செந்துறை சாலை கலவை உரக்கிடங்கு பகுதியில் 3 TPD கொள்ளளவு நுண் உரம் தயாரிக்கும் மையம் Micro compost கட்டுமானப் பணி மேற்கொள்ளுதல். | 35.00 |
| 2. | செந்துறை சாலை கலவை உரக்கிடங்கு பகுதியில் அணுகு சாலை மற்றும் சுற்றுச்சுவர் கட்டுமானப்பணி மேற்கொள்ளுதல். | 50.00 |
| 3. | செந்துறை சாலை கலவை உரக்கிடங்கு பகுதியில் எதிர் தடுப்புச்சுவர் கட்டுமானப்பணி மேற்கொள்ளுதல். | 50.00 |
| 4. | கீழக்குடியிருப்பு (விருத்தாசலம் சாலை) மயானம் பகுதியில் 3 TPD கொள்ளளவு நுண் உரம் தயாரிக்கும் மையம் Micro compost கட்டுமானப் பணி மேற்கொள்ளுதல். | 35.00 |
| 5. | கீழக்குடியிருப்பு (விருத்தாசலம் சாலை) மயானம் பகுதியில் அணுகு சாலை மற்றும் சுற்றுச்சுவர் கட்டுமானப்பணி மேற்கொள்ளுதல். | 25.00 |
| 6. | பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் 12 எண்ணிக்கை சப்ளை செய்தல். (Battery Operating Vehicle) | 21.60 |
| 7. | இலகுரக வாகனம் (Light Commercial Vehicle – 2 cu.m. கொள்ளளவு) 4 எண்ணிக்கை சப்ளை செய்தல். | 22.40 |
| | **கூடுதல்** | **239.00** |

<u>அலுவலக குறிப்பு :</u>

1) பணிகளின் காலதாமதம் மற்றும் ஒப்பந்ததாரரின் கடிதத்தினை பார்வையிட்டு மன்றம் அனுமதி அளிக்கலாம்
2) இப்பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களுக்கு தயார் செய்யப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு மற்றும் பிரேரணை அனுப்பி திருத்திய நிர்வாக அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண். 1109 / 2015 / இ1</u>

| | | | |
|---|---|---|---|
| 07.09.2018 | 22 | <u>பொருள் : 3</u><br>இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள வீடுகள் தங்கும் விடுதிகள் பள்ளிகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உள்ள கழிவு நீர் தொட்டிகளில் சேகரமாகும் மலக்கழிவுகளை சுகாதாரம் மற்றும் நவீன முறையில் சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற செந்துறை சாலையில் சுத்திகரிப்பு நிலையம் (Fecal Sludge Treatment Plant) அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.250.00 இலட்சத்திற்கு FSTP திட்டத்தின் கீழ் முழு மானியத்துடன் நிதிப்பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>அனுமதிக்கப்பட்டது.<br><u>ந.க.எண். 1207 / 2018 / இ1</u> | அனுமதிக்கப்பட்டது. |
| 07.09.2018 | 23 | <u>பொருள் : 4</u><br>தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018-19 -ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண். 34, அறிவிப்பு எண்.14-ல், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்பதிற்கிணங்க, ஜெயங்கொண்டம் நகராட்சியில் உள்ள 21 வார்டுகளிலும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத் தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) வீதம் மொத்தம் 21 வார்டுகளில் ரூ. 378.00 இலட்சம் (ரூபாய். முந்நூற்றி ஏழுபத்தி எட்டு இலட்சம்) ஆகும்.<br>இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, நகரில் உள்ளஅனைத்து வார்டுகளிலும், வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres) தனியார் தொழில் நிறுவனங்கள் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்பநுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் “Expression of Interest” விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் அனைத்து கீழ்க்கண்ட வார்டுகளிலும் செயல்படுத்தவும், இதற்கான அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | வார்டு எண் | சுத்திகரிப்புநிலையம் அமைக்கதேர்ந்தெடுக்கப்பட்டஇடம் |
|---|---|---|
| 1 | 1 | கீழக்குடியிருப்பு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |
| 2 | 2 | வாரச்சந்தை மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |
| 3 | 3 | மலங்கன்குடியிருப்பு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |
| 4 | 4 | சின்னவளையம் IUDM மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |
| 5 | 5 | சின்னவளையம் தெற்கு தெரு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |
| 6 | 6 | கீழ அரிஜனத் தெரு மோட்டார் அறை அருகில் |
| 7 | 7 | சிதம்பரம் சாலை (ஸ்டேட் பாங்க் காலனி) மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |
| 8 | 8 | அய்யனார் கோவில் (பெட்ரோல் பங்க் அருகில்) |
| 9 | 9 | சென்னீஸ்வரர் கோவில் தெரு (கோவில் அருகில்) |
| 10 | 10 | நாச்சியார் அம்மன் கோவில் தெரு |
| 11 | 11 | காந்தி நகர் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |
| 12 | 12 | அண்ணா நகர் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |
| 13 | 13 | காமராஜபுரம் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |
| 14 | 14 | அண்ணாசிலை மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |
| 15 | 15 | விசாலாட்சி நகர் மோட்டார் அறை அருகில் |
| 16 | 16 | அரசு மருத்துவமனை வளாகம் |
| 17 | 17 | வேலாயுத நகர் ஆண்ட்ரூஸ் பள்ளி அருகில் |
| 18 | 18 | கரடிகுளம் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |
| 19 | 19 | மேலக்குடியிருப்பு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |
| 20 | 20 | செங்குந்தபுரம் முதல் தெரு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |
| 21 | 21 | செங்குந்தபுரம் இரண்டாவது தெரு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அருகில் |

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1158/2018/இ1)**